

# "வரி" "விளக்கம்"!!!

"1-3-2008."

இதழ் I



பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா

# "வலி"

# "விளக்கம்" !!!

"1-3-2008"

இதழ் ௨

(ஸத்தியவாக்கை) 1



ஸத்தியம் பேசும்

தர்மம் செய்.

# ஓம்

நாவை அடக்கும்.

கருணையோடு இரும்.

"ஸத்தியம் பேசி நல் தர்மம் நிலைபெறும்"

"ஸ்ரீநாமத் குரு திருவடி தன்னை"

"நம்பினோர் கெடுவதில்லை"

"தெய்வம் மனுஷியாரும்"

"புத் பாவம் தத் பவதி"

ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெய ராம் ஓம்

"அகம் பிரம்மம் ஜெகம் பிரம்மம்"


"அகமே எல்லாம்"!

"ஜெகம், பரமம், ஜீவர்களும்"

"சிறிதும் இல்லை!"

அடங்கு! அடங்கு! அடங்கு! அடக்காதே! அடக்காதே! அடக்காதே!

௨



ஓம் ஆத்மானந்த குழந்தைகளே!

இதுவரையில், **ஸ்வய ஞானுபவ நூலின்!** விளக்கம், பல நூல்களிலும், கொடுத்திருக்கிறோம். ஆனால் இந்த இதழில், பாடலின், **வரி** விளக்கம் மட்டும் தருகிறேன். **இடைச்செருகல்** இல்லாமல், கடின பதம் இல்லாமல் அப்படியே, **ஸ்பஷ்டமாக** வாசிக்கும் நிலையில், உள்ளதாக, இது அமைந்திருக்கிறது. பாடல்களை, சிரத்தையுடன் பாடும், (படிக்கும்) மெய் அன்பர்கள், இதை சிரத்தையுடனும்! ஒருமித்த மனதுடனும்! **கவனம்** வெளியில் சிதறாமல் **உற்றுணர்ந்து** ஒரே நோக்கில், உணர்வீரேல்! **அது** ஆவீர் என்பது ஸத்தியமே!

ராஜ பாபா



(3)

சிவபுரம் என்ற பரசொரூப நிலை யானது செல்லும் இடமும் அல்ல. அது வந்து நம்மை அடைவதும் அல்ல. அது ஓர் பொருளும் அல்ல. நாம் அதுவாகவே இருக்கிறோம். மனத்தினை அகன்றால் போதும். அதாவது மனோநாசமாகி மனம் மறைந்தால் போதும். நாம் அதுவே.

இச் ஸ்வய ஞானுபவ நூலின், பாடல்களின், வரி விளக்க கருத்தை மட்டும்;

# சொல்லிய பாட்டின், பொருள் உணர்ந்து சொல்பவர் எவராயினும் செல்வர். சிவபுரம் பரவெளியின்;

பரசொரூபமாகிய,

# ஜீவன் முக்தியை அடைவர்.

இது ஸத்தியம்! இது ஸத்தியம்!! இது ஸத்தியம்!!!

[illegible]




அரசனும்! சேவகனும்! தொழிலால் பேதமாம். அவ்விருவரும் மனித இனத்தால் ஒன்றே. அதேபோல் இயற்கை நிலையாலும்; ஆன்மாவின் நிலையாலும் பேதமே! ஆனால் **இருப்பின்** நிலையில் உண்மை ஒன்றே! இப்பேதம் மனக் கற்பனையால் வந்தது. இப்பேதம் மனக் கற்பனை ஒழிந்தால் தானே நசித்துவிடும்.

# முன்னுரை!

**பர, தத்; தவம்(ம்)** வடிவாக திரண்டு எழுந்து, **பரமே** நாம ரூப வடிவம், தாங்கி வந்தது என்றும். அப்பரமே பரமாத்மாவாகவும்! அப்பரமே ஜீவாத்மாவாகவும்! அப்பரமே பரமாத்ம நிலைக்காக, **மாயா**வையும்! ஜீவாத்ம நிலைக்காக **மனதையும்** தனக்குத்தானே, உண்டுபண்ணிக் கொண்டு, விளையாடுகிறது எனவும், உணர்ந்தால் போதும். பரமாத்ம நிலையால், **ஸத்வம்** என்ற, ஏககுணம் ஒன்றையும், ஜீவாத்ம நிலையில், ரஜோ! தமோ! குண சம்பந்த **தோஷ** குணங்களையும் தனக்குத்தானே, தாங்கிக் கொண்டு, விளையாடுகிறது.





ஸத்வகுண! பரமாத்ம நிலையில்! ஸ்ரீபகவானாகவும்!

ரஜோ! தமோ! தோஷகுண நிலையில்; ஜீவாத்மா

என்ற **பக்தனையும்**! இந்தபக்தனை,

நடுத்தாட் கொள்ளும் நிலையில்; **கருணை**

யின் வழியாக, வருவதையே,

**பா; தத்; துவ** வழியாக திரண்டெழுந்து,

கருணையுடன் வந்தது என்று, உபசாரவசனமாக,

ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.

அது ஏன் அப்படி வர வேண்டும்? என்றும்; அது ஏன்


அப்படி விளையாட வேண்டும்? என்றும்; அது அதன்

நிலையில், சும்மாவே! சுகமாகவே! இருக்கலாமே என்றும்!

**மனம்** வசம், அகப்பட்ட மாந்தர், கேட்கின்றனர்?

ஆனால்? **அறிவாகவே** இருக்கும் அன்பர்கள்,

அப்படி அது ஒன்றும் விளையாடவில்லையே! எந்தவிதமையும்,



அன்றும்! இன்றும்! என்றென்றும்! அது
தானாகவே, இருக்கிறது என்றும்; நாமும்!
அதுவாகத்தானே, இருக்கிறோம் என்றும்; விளையாடு
என்ன, எதைச் சொல்கிறீர்கள்? என்று அறிவோம்
கூர்ந்து நோக்கிவிட்டு சொல்மயர்
களையும் காரணம்! சொல்லும் பொருள்களையும்,
ஏந்த நாமரூபத்தையும்
காணவில்லையே என, உணர்ந்த நிலையில்;
நம்முடைய ஸ்வயம் ஜோதி யான,
அகண்டப் பேரொளியான எம்முடைய, பிரகாசத்தின்
வைபவமே! கானல் ஜலமாக, தோற்றியது போலும்
அப்படியாகில் இது எம்மை யன்றி; எமக்கன்னியமாக
இல்லை என்று உணர்ந்து, சும்மாவே சுகமாகவே இருக்கிறோம்.



மனம் படைத்த ஓர்
ஜீவன்! தனைத்
தேடுவதற்காக
தானே தானே மற்றொன்
று போல் (பக்தன்&
பகவான்! குரு&சிஷ்யன்)
வேஷமிட்டு நாடகம்
நடத்தி! பரிய மனம்
நாசமாவதற்காகவே (7)
நடிக்கிறது என உணர்ந்ததால் போதும். மனம்
மறைந்ததால் இம்மன நாடகம் தேவையில்லை.

ஆனால், பாடம் இங்கு, எப்படி அமைகிறது என்றால்?
பரசொரூபமாகிய, பரமே! எங்கள் நிலை என்ற, பரமாத்ம
ஸ்ரீபகவானாகவும்! ஸ்ரீ பரமாத்ம பகவானே! ஜீவாத்ம நிலை
யில், ஓர் பக்தனாகவும், இவ்விரண்டு **வேஷம்**
போட்ட தன்மையானால், தாம் போட்ட, பொய் வேஷத்தின்,
பொருட்டு, பரமாத்மாவானது, ஜீவாத்மாவுக்காக,
**பக்தன் & ஸ்ரீ பகவான்** ஆகவும்,
பின் **சிஷ்யன் & ஸத்குரு** ஆகவும்,
வந்து, ஓர் காரண காரியமுடன், வருவதையே,
படியெல்லாம் கடந்த சுத்த, பிரம்ம வஸ்துவாக,
இருந்தும், **பஜனையால்** (உள்ள உருக்கம்)
கண்ணீர் பெருக்கம்! உன்மயலால் வேறுகதி இல்லை!
என்ற **ஏக்கத்தால்** மகிழ்ந்து தோன்றும், திவ்விய சேர்த்தியே!



மனோ தோஷம்:- (8)
ஸங்கல்ப, விகல்பம் எனச் சொல்வாம். அதாவது குற்ற உணர்வின் கற்பனையாகும்.

மனோ பேதம்:- அநேகம் தம் மண்மயமாக இருந்தும். அவைகளுக்கு நாமரூபம் கொடுத்து அவைகளை உடைமை உரிமை பாராட்டுவதே மனோ பேதம் ஆகும். எல்லாம் மண்ணே என உணர்ந்தால் தோஷமும், பேதமும் இல்லை என்று தெளிவோம்.

என்ற நிலையில், அதுவே! அதுக்காகவே! அதுவாகவே! இறங்கி வந்திருக்கிறது, எனவே, உணர்ந்தால் போதும்?

படியுங்கோ! கேட்டுங்கோ! இதனால் தோன்றும், இப்பேதம் எல்லாம் **மனோபேதமே!** தவிர வேறொன்றும், இல்லவே இல்லை.


மனதை மனதுக்காக்கி விட்டால் அதாவது மனதை அறிவாக்கி விட்டால், அதாவது மனதை ஸ்ரீ பகவானாக ஆக்கிவிட்டால், அதாவது மனதை சாட்சியாக ஆக்கிவிட்டால், வேறு சாதனையே இல்லை!

**மனோதோஷம்** நீங்க வேண்டுமானால்? சர்வார்ப்பணம்! ஒன்றே உரிய மார்க்கம் ஆகும்!

**மனோபேதம்** நீங்க வேண்டுமானால்? பிரம்மார்ப்பணம்! ஒன்றே உரிய மார்க்கம் ஆகும்!

தோஷம் என்றால் குணங்கள். பேதம் என்றால் நாமரூபங்கள். குணங்கள் மனோ சம்பந்தம்! நாமரூபங்கள் மாயா சம்பந்தம். இதன் மார்க்கம் எல்லாம் நீயே! எல்லாம் ஒன்றே! காரணமும் ஒன்றே!!!

[illegible] பாபா.



(ஸத்திய வாக்கை)

ஸத்தியம் பேசு.

தர்மம் செய்.

நாவை அடக்கு.

கருணையோடு இரு.

“ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்!”

# “பர, குரு, இறை, ஏகதி”

காலாதீத பர சொரூபமே! ஓர் விளையாட்டின் நிமித்தம், தானே பரமாத்ம, ஸ்ரீ பகவானாகவும், தானே ஜீவாத்ம, மனித வடிவிலும், தானே பரப்பிரத்யக்ஷமாக வும்! இருந்துகொண்டு, விளையாடும் பொருள்களாக, நாமரூப ஜக ஜீவ (நடப்பன! பறப்பன! நீந்துவன! ஊர்வன! தாவர ஜங்கமங்கள்) அனைத்து பொருள்களாகவும், இருந்து கொண்டு, ஆனந்தமாக! விளையாடிக் கொண்டிருக்கிறது.

இவ் விளையாட்டு, பரமாத்மா & ஜீவாத்மா! ஐக்கிய விளையாட்டாக இருப்பதால், இதை, ஆனந்த நடனம் எனவும், பரமும் & மாயாவும்! இணைந்து விளையாடுவதால், ஸ்ரீ பகவானும் & பக்தனும்! என சொல்லி, பக்தனுக்காக, தம் கருணையால், இறங்கி வந்திருப்பதாகவும், அதை


(10)



உ

பரமாத்ம சொரூபம் எங்கும்
நிறைந்திருந்தாலும். இந்த
மனித வடிவில் மட்டும்
விசேஷ இருப்பும்,
விசேஷ இயக்கமும்,
உண்டென ஸ்ரீமஹான்கள்
சொல்வர். காரணம்
இம் மனிதனிடம் தான்
நம்மில் இருந்து பிரித்தாலும்.
மற்றும் அனைத்திலும் தாம் நிறைந்தனம்.
ஆகவே? தொடரும்

**பர; தத்; த்வம்)** (பரம் பொருளே,
பரமாத்மாவாகவும். அதுவே ஜீவாத்மாவாகவும்) வடிவம்!
என, தன்னை உணர்ந்த, ஸ்ரீமஹான்களால், சொல்லப்படுகிறது.
இதில் ஓர் ரகஸ்யம் என்னவென்றால்?
நாமரூப, தோற்றத்தின் காரணம் **மாயா** என்றும்,
அவைகளை, உடைமை/உரிமை/
கொண்டாடி, விளையாடும் நிமித்தம் **மனம்** என்றும்,
சொந்த, பந்த, (பாச) பற்றின், நிலையில்
வைத்துக் கொண்டு, அதுவே விளையாடிக் கொண்டிருக்கிறது
இப்பரப்பிரத்தியட்ச உண்மையை, உணர்த்தும் நிமித்தம்,
அதுவே, **பர, குரு. இறை**/ கருணையால்
வருவதையே, **ஸத்குரு**/ எனவும், சொல்லுவார்கள்.
இங்கு மனதால், உண்டான, **பேதம்** அனைத்தும்,
**அறிவால்** நீங்கும்! பேதம் நீங்கிய நிலையில்,
**பேரறிவால்** எல்லாம் ஒன்றே! அது நாமே!
நாமே அது! என்ற அண்டாண்ட பாவனை, பெறுவதால்,
அவன் அருளால், அவன் தாள் வணங்கி என்ற நிலையில்,
பர, குரு, இறை/ கருணையால், அதையே. அதன் நிலையில்
போற்றி வணங்குவோம்!




மனித வடிவில் மட்டும் இருப்பான், இயங்குவான், என்றும் ஸ்ரீமஹான்கள் சொல்வர். மற்றும் அனைத்திலும் இருப்பான் இயங்குவதில்லை என ஸ்ரீமஹான்கள் சொல்வர். இவனிடம் மட்டும் மனமுண்டு மற்றும் அனைத்திலும் மனம் இல்லை. ஆனால் அறிவுண்டு! முடிந்தது. (11)

(1) காலாதீத பரசொரூபமே, தம் நிழலாகிய, யோகமாயாவுடன், இணைந்து, மறைபக்குவமான, மெய் அன்பர்களுக்காக, தாமே இறங்கி வந்தது. அது பரம் சக்தி! என்ற வாக்கிய விளக்கமாக மட்டும்! எந்த ரூபமும் தாங்காமல், எக்கட்டும் யாரும் இல்லாமல், சுதந்திரமாக, பிரம்மானந்த நிலையில் தாம் தாமாய், இருப்பதால், அதை ஆனந்த நடனம் என, ஸ்ரீமஹான்களால் சொல்லப்படுகிறது. அந்த பராபர வஸ்துவை, வணங்குவோமாக.

(பரம்)

(2) நாமரூப தோற்றம் மனதிற்கே. ஆனால் அது, எந்நிலையிலும், இருப்புத் தன்மையோடு இருப்பதால், அதை ஸத் என்றும்! அதுவே அசையும்! அசைக்கும்! இயக்கத் தன்மையால் வருவதால், அதை ஸித் என்றும், அப்படி அசையும்! அசைக்கும்! இயக்க நிலையால்! தோன்றுவதை, ஆனந்தம் என்றும், அந்த ஒன்றே ஆனது! அதற்கு அயலாக ஏதுவுமில்லை.




ஸத்தியத்தை (12)
நிலைநாட்டுவதே
ஸத்குரு கார்யமாகும்.
நாமரூப ஜகஜீவ
தோற்ற இருமை
உணர்த்துவதும், அதை
தெய்வீகமாக மாற்றும்
தர்மத்தை போதிப்பது சாமான்ய
குருவாகும். புலமைகளையும், அதிசயங்களையும்,
காட்டி மயக்கத்தை உண்டுபண்ணுவது சக்திகுரு
ஆகும்.

அதை, மனம் படைத்தோர், நாமரூப, ஜக ஜீவ,
உலகமாக காண்கின்றனர். அதை அறிவுடையோர்,
அதுவாகவே, உணர்கின்றனர். அது ஆதி அந்தம்,
இல்லாததென்று, ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

(3) அம்பர சொரூபத்தை, பரமாத்மா என்றும், ஆத்மா
என்றும் சொல்லலாம். நாம் ஆத்மாவாக இருப்
பதால், அதையும், ஆத்மா என்றே, அழைப்போம்.
தவிர்த்து, பரமாகிய, பிரம்மத்திற்கு, அன்னி
யமாய், ஆத்மா இல்லை/ ஆத்மாவுக்கு அன்னியமாய்,
பிரம்மம் இல்லை. ஆத்மாவுக்கு அன்னியமாக, தேவ
தெய்வங்கள் இல்லை. ஆத்மாவுக்கு அன்னியமாக,
நாம் இல்லை! நமக்கு அன்னியமாய், தேவ தெய்வம்
இல்லை. நமக்கு அயலாக, எந்த நாமரூப, ஜகஜீவ
சொரூபங்கள், எதுவும் இல்லை. ஆகவே எந்த
நாமரூபங்களும் இல்லை.

ஆகவே ஜக! ஜீவ! பரம்! (தெய்வம்) பிரம்மம்!
எல்லாம் நாமே! நாமே அனைத்து ஜக! ஜீவ! பரம்
(தெய்வம்) பிரம்மம்! ஆகிய எல்லாமாயிருக்கிறோம்
இதுவே ஆன்ம! பர! பிரம்ம! ஜீவ! ஐக்கியம் ஆகும்!



(3) மேலே சொன்னபடி கர்த்தாக்களும் பொன்னை இல்லை! நாமும் கர்த்தாக்களின் பொன்றாகவும்! அதன் ஆபரணங்களாகவும் இல்லை. கர்த்தாக்களும் நாமும் பரமாகிய மண்ணைகளே இருக்கிறோம். அனைத்தும் பரமே! பரமே அனைத்தும்!!


(4) பரந்து விரிந்த, ஜகமானது, எந்த நாம ரூபமாகவும், இல்லாத தன்மையில், அதை சிருஷ்டிக்கிறோம், எனச் சொல்லும், **பிரம்மனும்** இல்லை.

பரந்து விரிந்த ஜகமானது, எந்த நாம ரூபமாகவும் இல்லாத தன்மையில், அதை பாலனம் செய்கிறோம், எனச் சொல்லும், **நாராயணனும்** இல்லை.

பரந்து விரிந்த ஜகமானது, எந்த நாம ரூபமாகவும், இல்லாத தன்மையில், அதன் மாற்றம்! மறைவு! கர்த்தாவான, **சிவபெருமானும்** இல்லை.

ஆனால் இம் மூவரும், காலாதீத பரசொரூபமாக இருக்கிறார்கள். அவர்களோ, நாமாகவும்! நாமே அவர்களாகவும், இருக்கிறோம் என்பதே சத்தியம்!

(5) நாம ரூப, ஜகமோ! ஜீவகோடிகளோ! தேவ தெய்வங்களோ! இருப்போ! இயக்கமோ! இல்லாத தன்மையில், தோற்றம், ஆதியும் அந்தமும் இல்லை. மேலே சொன்ன, எந்த நாம ரூப தோற்றமும்,




இல்லாத தன்மையினால், சொந்தம் கொண்டாடுபவர்களும், அம்மையும் இல்லை! சொந்தம் கொண்டாடும், மனம் இல்லாமையினால், பந்தம் என்ற, வினைத் தொடர்பும் இல்லை! பந்தம் இல்லை என்னும் போது, பந்த நிவர்த்தி என்ற, மோக்ஷம் என்ற, ஜீவன் முக்தியும் இல்லை! ஆகவே, இவை அனைத்திற்கும், ஆதாரமான **மனம்** இல்லாமையால், தோற்றம்! சொந்தம்! பந்தம்! புண்ணியபாப வினை! வினையின் முடிவான மோக்ஷம்! இவையே இல்லை. எந்த விடையும், காலாதீத பரமாத்ம பிரம்மமே, இருக்கிறது. அதுவாகவே நானே இருக்கிறேன்.

(6) மேலே கூறிய, இந்நிலை, எப்படி பெற்றேன் என்றால்? பலகோடி ஜன்மாக்களில், பலன் கருதாமல் செய்த **தர்மமே** காரணமாக அமைந்தது.


அத்தர்மத்தின் காரணமாக, அமைந்த ஞானசாதனமாகிய, விவேகம்! வைராக்கியம்! குற்றம் குறையற்ற சமம்!

(15)




சிரத்தை! ஸாந்தி! சமாதானம்! மோக்ஷ இச்சை!
இவை அனைத்திற்கும், ஆதாரமான பொறுமை
இவைகளிறவ், எமக்கு அயலாக எதுவும் இல்லை!
எல்லாம் எமக்கு அயலாக இல்லை! என்ற பேருணர்வு
அதாவது, பேரறிவை (அகண்டாத்ம மாயினையை)
பெற்றுக் கொண்டோம். ஆகவே அதுவாகவே இருக்கிறோம்.

(7) எதிரும் புதிருமாக, தோன்றும், இந்த நாம ரூப,
ஜக ஜீவ, தோற்றமானது, விகார விவகாரத்தினால்,
பேசிப் பேசியே உயிர் பெறுகிறது.
(பேச்சை குறைத்து, குறைத்து நிறுத்தினால் ஜகம்மறையும்)
இதன் ரகஸியம், ஸத்தே ஸித்ஆனது! ஸித்தே சித்தம்
என ஆனது! சித்தமே ஜகம் என ஆனது! ஆகவே சித்தத்தை
ஸித்தாக்கி! ஸித்தை ஸத்தாக்கி! ஸத்தே நாம் என
உணர்ந்தால் போதும்! குற்றஉணர்வுகளற்றால்! அதுவே
நாம்! நாமே அது! என அமைவுற்றிருப்பாயாக!



8 குற்றம் குறையாக, காணப்பட்ட! பேசப்பட்ட!
மனோ விகாரம் அனைத்தும் பொய்யே! அதன்
எண்ண வடிவம், அனைத்தும் பொய்யே! நிறைய
விளக்கமும்! அலங்கார விளக்கமும்! கொடுத்து.
பேசி உணர்த்தும், பொருளும் பொய்யே!
எனது என, சொந்தம் கொண்டாடும், அனைத்தும்
பொய்யே! காரணம், அவை அனைத்தும், தோற்றம்!
இருப்பு! மாற்றம்! மறைவு! கூடி குறை
தோஷங்கள, உண்டுபண்ணக் கூடியது! இவை அனைத்தும்,
நாம ரூப, சம்பந்தம் கொண்டதாகும். அதலே,
நாமரூபம் பொய்! அந்த நாமரூபம் தோன்றிய, மண்ணே
அந்த ஒன்றே பிரம்மம்! அதுவே நாமம்! நாமமே அது!

9 மனதின் எண்ணமே ஜீவன்! மனதின் எண்ணமே ஈசன்!
மனதின் எண்ணமே ஜகம்! மனதின் எண்ணமே மனம்!
மனதின் எண்ணமே காம மோஹம்! மனதின் எண்ணமே அதன் கர்மா!
மனதின் எண்ணமே பயதுக்கம்! ,, ,, எல்லா அனர்த்தங்களும்!
ஆகும்.



(17)

மேலே கூறிய, நாம ரூபங்களும், அதன் குணங்களும்,
அதன் விகாரமும்! அதன் விவகாரமும்! அதன்
புண்ணியபாவ! ஜனன மரணமும் ஆகும்!
மேலே கூறிய, இவை அனைத்தும், நம் ஆத்மாவாகிய
பிரம்மத்துக்கு அயலாக இல்லை நாமும் அதற்கு
அயலாக இல்லை!

(10) அம் மனை மன கற்பனை இல்லாமல் நாம்
சும்மாவே சுகமாக, இருந்தால், அதுவே நிஷ்டை!
அதுவே ஞானம்! அதுவே மோக்ஷம்! அதுவே
அனுபவ சகஜ ஞானம்! அதுவே பிரம்மம்! அதுவே
அகண்டானந்தம்! ஆகவே மன எண்ணமானது,
நாமரூபங்களை, பற்றியே எழும்! இருக்கும்!
இயங்கும்! அம்மன எண்ணங்களை, இல்லாமல் பண்ணி
எல்லாம் ஒன்றே! அது சுத்த சிவமே! அதுநாமே!
நாமே அது! என சும்மா சுகமாக, ஆனந்தமாக இரு!



காண்பவனாக இரு! (18)
காட்சிபொருளாக
இராதே என்றும், ஆத்மா
வாக இரு! அனாத்மாவாக
இராதே என் பொருள்
சாஸ்திரம் சொல்கிறது
இதை உணர்ந்தால்
ஆத்மா செயலற்றவன்.
ஆத்மாவின் அம்சம ஸ்ரீபகவான் செயலுற்றவன்.
தொடரும்.

(11) **நாமரூப** ஜகத் ஜீவ சொரூபங்களும்! அதன் பொருள்களாகிய, தோற்றமாக இராதே! அவைகளை, சிருஷ்டித்த, ஸ்ரீபகவானாக இரு!

காணும் பொருளாக இராதே! காண்பவனாக இரு!!

இந்நிலை பெற்றவனுக்கு, நனவும்! கனவும்! உறக்கமும்! இவ்வாநிலை பெற முடியும். காரணம்:- தன் சிருஷ்டியின் மேல், தமக்கு ஆசை மோஹம், உண்டாகாது. ஆசை மோஹம் இல்லையானால், ஜனன மரணம் இல்லை. அதுவாக நாமும்! நாமே அதுவாகவும் இருப்போம்!

(12) அணு அளவேனும், நாம் அதற்கு, அயலாக இல்லாமல், இருந்த போதும். நாமரூப, ஜகத்தை **எனது**! எனதுடைமை! உரிமை! கொண்டாடிய தன்மையால், ஸ்ரீபகவானை மறந்தோம்! **கண்ணா** மனம் வசம், அகப்பட்டோம்! சாதகனைப் பண்ணும் நாம், ஸ்ரீபகவான் கருணையை, பெற்றுவிட்டால், **நல்ல** மனம் நம் கைவசம் ஆகும். ஸ்ரீபகவான் கருணையை பெறாமல், மனம்பக்குவப்படாது! மனம்பக்குவப்படாமல், ஸ்ரீகுரு அருளும், பிரம்மாத்மபாவனை, அனுபவமாகாது!




முன்பக்க தொடர்ச்சி (19)
ஆகவே நீ ஸ்ரீ பகவானாக இருந்தாலும், ஸ்ரீ பகவானின் திருஷ்டி பொருளாக இராதே! என்றும் பொருள் கொள்ள வேண்டும். ஆத்மாவை சொல்வது பொருந்தாததாகும். முடிந்தது.

பிரம்மான்ம பாவனை, அனுபவம் ஆகாமல், நாம் அது ஆக முடியாது! இது ஸ்ரீ ஞானிகளின் அனுபவம் ஆகும்.


(13) சித்தம் (மனம், புத்தி) என்ற, ஓர் பொருள் இல்லவே இல்லை. சித்தத்தின், சிந்தனை என்ற, ஓர் எண்ணம் வந்தாலும் அது பக்தாகிய ஸித்தி செயலே என்பது பிரமாண உண்மையாகும்! அந்த ஸித்தி செயலே, நாம ரூப, ஜகஜீவ, பரமாய் (தெய்வமாய்) தோன்றி, சஞ்சல துன்பத்தை கொடுக்கும். ஆகவே ரித்தம் என நம்பாதே! ஸித் சொரூபம் எனவே நம்பு! ஸித்தை ஸத்தாக மாற்று! அதாவது இருப்பது ஒன்றே! நடப்பது நவமே! என மாற்று! நீ அதுவாகவே இருப்பாய்!

(14) மனிதர்களாகவும்! தேவர்களாகவும்! நடப்பன! பறப்பன! ஊர்வன! நீந்துவன! மற்றும் கிருமி கீடகம்! மரம், செடி, கொடி, புல்பூண்டு முதலிய, தாவர சங்கமங்கள்! ஆகிய அனைத்து நாமரூபம் எல்லாவற்றிலும், கண்களுக்கு தெரியும் நிலையில், ஸ்ரீபகவானே இருக்கிறான் என்றும்,




20

கண்ணால், கற்பனையால் காணும் பொம்மை
காட்சிகள் எல்லாம், நம் பஞ்சகமனதின் பழக்க
வழக்க தோஷ காட்சிகள் என்பதும். இவைகள்
ரஜோ தமோ! குணவிருத்திகள் என்பதும். ஸத்வகுணம்
பொறுமை! அன்பு! கருணை! நிதானம்! ஸாந்த
ஒன்றால், அமைதியாக உணர்ந்தால், அவஸ்யம்
ஸத்தியமாக, ஸ்ரீ பகவானை தரிசிக்கலாம்! உணரவும்
முடியும் வேறு எந்த மார்க்கமாகவும், ஸ்ரீபகவானை காணமுடியாது.
15 ஓர் உண்மையை உணர்:- மனம்! புத்தி! சித்தம்!
என்ற பொய்யான கற்பனையும் இல்லை! ஐக ஜீவ க்ஷேத்ரம்
அனைத்தும், நாமரூபமாக இல்லை! இவைகளை பொய்
எனச் சொல்லும் பாக்கியம் இல்லை!!! பஞ்சமாபாதகம்
செய்த மஹாபாபிகளும் இல்லை!!!! மேலே கூறிய,
இவை அனைத்தும், எந்த நாமரூப குணங்களுடன்,
இல்லவே இல்லை! எல்லாமே நாமரூபமற்ற, மண்ணா
கிய பரமே! பரமாகிய மண்ணே! ஆகவே, இருப்பது
ஒன்றே! நடப்பது நவமே! என அம்மா அகமாயிரு.




16 உனக்கு அயலாக, தோற்றியவும் இத் தோற்றம் எல்லாம், பிரம்மமே! சொல்லும் யாவும்! கேட்கும் நீயும்! நாம் இருவரும் காணும், இவ்வுலகமும்! பின்னி பின்னி! பின்னி பின்னி! பின்னி பின்னி! தோற்றும் இப் **பேதம்** எல்லாம், மனோவிகாரமே யன்றி வேறொன்றும் இல்லவே இல்லை எல்லாம் ஒன்றே! இருப்பது ஒன்றே! நடப்பதுவுமே! நாமே அது! அதுவே நாம்! என்ற **ஞானம்** யால் வஞ்சக மாயாமனதை வெல்வாயாக!

17 ஆகாயம் போல், எங்கும் நீக்கமற, நிறைவாய் நிறைந்திருக்கும் பரிபூரண பிரம்மம், அல்லாமல், ஓர் அணுவும், எங்கும் எதுவும் இல்லை! அந்த தோற்றங்களும், அதுக்கு அயலாக இல்லை என்றும், அதுக்கு அயலாக, எந்த தோற்றமும் இல்லை என்றும், இப்பாவனையால், மனதை வென்று, மனவாக்குக்கு எட்டாத, பரமே ஆகி, சும்மாவே சுகமாகஇருப்பாயாக.



18 யாம் சொல்லும் அனுபவ ஞானத்தை, வாய்
ஞானமாக (இல்லாமல்) சிரத்தை இல்லாமல், விட்டுவிடாமல்
ஒர்மையான மனதுடன், பரி பூரண மான,
பா பாவனையால், உன் மனதை வெல்வாயாக!
இது எம் ஸ்ரீ ஸத்குருமேல் ஆணை!

19 உனக்கு சந்சவம் கொடுத்து தீங்கு செய்யும்
சித்தம் இல்லை எல்லாம் ஸிதம்பரமே!
உன் கண்களால் காணும், எந்த நாமரூபமும்,
இல்லவே இல்லை எல்லாம் மண்ணுமய பரமே! பரமாகிய
மண்ஞையாகும்!
நான்! எனது! என்ற அஹங்கார, மமகாரமும்
இல்லவே இல்லை சர்வாரம்பண நிலையில், ஸ்ரீ பகவா
னுதவும்! பிரம்மாரம்பண நிலையில், பரமாகவும்
எங்கும், உளசிநாட்ட இடம் இல்லாமல், அந்த




(23)

ஒன்றே நிறைந்திருக்கிறது என்றும்,
அதுவே நாம்! நாமே அது! என்றும், ஸ்வய
அனுபவத்தில்; இருப்பது ஒன்றே! நடப்பது நாடகமே!
என சும்மாவே சுகமாக, தூங்காமல் தூங்கும் நிலை யில்
(ஸாக்ஷியாய்) ஸாந்நியமாவாய்!


(20) மனதால் செய்வதுவே, செய்தகாகும்.
தாவத்தால் செய்வது, செய்தது ஆகாது.
மனம் ஓர் ஸ்விச்போர்டு! தாவம் ஓர்கிரைண்டர்!

ஆகவே எண்ணமே, கர்மா ஆகும்! ஆகவே,
அந்த மன எண்ணத்தை, நாமரூப ஜகஜீவ
தொந்த பந்த, பாச பற்றில், நில் பெருமல்,
எல்லாம் ஒன்றே என்ற நிலையில்; இருப்பது ஒன்றே
நடப்பது நாடகமே! என்ற பரபாவனை, எண்ணத்தால்
பிணைத்து, அக்நி பாவனையால், மனதை
வென்று, கலக்கமயம், இல்லாமல், அதுவாகவே
இருப்பாய்!



௨௪


௨௧ இது பொய்! இது உண்மை! என விசாரணை பண்ணுது,
தன்மையால் தான், நாம ரூப, ஜகத் ஜீவ, மயக்கம்!
கலக்கம்! பயம்! தோன்றுகிறது. மனம்! புத்தி!
சித்தம்! பூதவாக தோன்றும், தோற்றம் எல்லாம்.
பிரம்மத்திற்கு, அயலாக இல்லை என்று; நீ
உணர்வு நிலை தான், மனதை ஆயிக்க முடியும்!
நாம் ஸித்தாகிய, ஸத் (ஆத்ம) சொரூபமே என்று,
உறுதியிறவி, இருப்பது ஒன்றே! நடப்பது நவமே!
என சிந்தித்து! சிந்தித்து! ஸாந்தி அவாயாக!
௨௨ எண்ணும் மனம் என்றும்; பேசும் வாக்கு
என்றும்; அதனால் காணும் பொருள் என்றும்.
தோற்றும், இப் பேதம் எமக்கு இங்கு இல்லை.
காரணம்; கனவில் காணும் பொருள், நனவில் இல்லை!
நனவில் காணும் பொருள், கனவில் இல்லை! இவ்விரண்டும்
ஆழ்ந்த உறக்கத்தில் இல்லை! இம்மூன்றுமே எம்மிடம் வந்து
இருந்தும் மறைய கூடியதாகும். ஆகவே யாம் ஒன்றே,
ஸத்தியம். ஆகவே, இங்கு இருப்பது ஒன்றே! நடப்பது
நவமே! என ஸமாவேசகமாகவே இருக்கிறேன்.




(23) முன்னே கூறிய, மனோ ஜயம் கிடைக்கும் வரை, நாமரூப, ஜக உறவு, பொருள்களில் நான்! என்னுடைய! எனது! என்ற சொந்த, பந்த, பாச, பற்றினை, விடுவதே **மனோஜயம்** ஆகும்! இதை விடுவது, சர்வார்ப்பணம், ஒன்றாலேயே விட முடியும்! இந்த நியால், மனம் ஜயிக்கப்பட்டால், **ஞான** சூரியன் உதிப்பான். அஞ்ஞான இருள் ஓடி விடும்.

(24) முன் கூறிய, சர்வார்ப்பணத்தால், ஆணவம்! கன்மம்! மாயையால், தோன்றிய, மும்மல **மனம்** (மலமற்று) **அமலம்** ஆகும்! இந்த அமலமான மனதினால், பிரம்மார்ப்பணத்தில், மனம் மனத் தாகும். இதை திடமாக, செய்யும் போது, மனோ நாசம், முழுமையாக கைகூடும் இந்நிலையால், மனோ நாசம் செய்து, ஜோதி சொரூபமான, ஆத்மாவே நாம் என்றும்! நாமே ஆத்மா என்றும்! இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என சும்மாவே அகமாகவே இருப்பா யாக!

(26)




(25) எப்பாவமும் (எந்த பாவனையும்) இல்லாத,
அறிவு சொரூபமான, பரம்பிரம்மமானது, மனதின்
கவனக்குறைவால்; நாமரூப, ஜகஜீவ, சொரூபமாக
தோற்றும்! எல்லாம் ஒன்றே! அது மண்ணாகிய பரமே!
(பிரம்மமே) பரமாகிய மண்ணே! என உணர்வுடன்,
உணர்ந்தால், எல்லாம், பரமாகிய பிரம்மமாகத் தோன்றும்!
சங்கல்பமே உலகம்! சங்கல்ப ரஹிதமே மோக்ஷம்!
(எண்ணமே உலகம்! எண்ணமற்றிருப்பதே மோக்ஷம்)
(26) தனது மனமுயற்சி என்பது,
சர்வாரம்பணம் ஆரம்பம் ஆகும்! இதனால் தோஷ
குணங்கள், சர்வ நாசம் ஆகும்! பிரம்மார்ப்பணம்,
முடிந்த முடிவாகும்! இதனால் மனம், மனக்காதல் அறிவாகும்.
இதுவே தனது மனமுயற்சி ஆகும். இதுவே வெறும்
மெய் உணர்வு! சுபக்கிற்கும் சமமாகும்!
அதிஅதிசுலபமாகும்! சஞ்சல பயதுக்கத்தை,
நாசம் செய்யும்! புண்ணிய பாப வினையை, நாசம்
செய்யும்! ஜனன மரணத்தை, சர்வநாசம் செய்யும்!



(27)

(27) நனவில், நாமரூப பொருள்களை, **தேடி**
அடைகிறோம். ஆனால் அவை, வந்து, இருந்து, மாறி
மறைந்து விடுகிறது. ஆகவே அனைத்தும் பொய்யே!
கனவில், நாமரூப பொருள்கள், நம்மை **தேடி**
வருகின்றன. ஆனால், விழித்த உடன், எல்லாம் மாயமாய்
மறைந்து விடுகின்றன! ஆகவே அவையும் பொய்யே!
இவ்விரு நிலைகளிலும், காணும் **நாம்** உண்மையே!
(நாம் ஸ்ரீபகவானாகிய ஆத்மாவே!)
ஆகவே, நனவோ கனவோ காண்பனவன்று! காண்பவனே
(ஆத்மாவே) (ஆத்மாவாகிய, ஸ்ரீபகவானே ஸத்தியம்)
நாம்! நாமே காண்பவன்! இங்கு இருப்பது ஒன்றே!
நடப்பது நலமே! என ஆத்மாவே அகமாகக்கொ!

(28) இந்த மனோநாசம், செய்யும் பயிற்சிக்கு,
எந்த வருத்தமும்! எந்த கஷ்டமும்! இல்லவே இல்லை.
எண்ணி எண்ணி, பார்த்து பார்த்து, மனம் மிரள வேண்டாம்.
திட்டமிட்ட காரியங்கள், ஒழுங்காக நடைபெறு
கின்றன என, நாம் **அடங்கி** இருந்தால்,
போதும். வேறு எந்த சாதனையும், தேவையில்லை.




(28)

நாம் எக்காரணம் கொண்டும் அடக்காமல்
நாம் அடங்கும் போது, தேவ தேவன் ஸ்ரீபகவான்
கருணை நமக்கு இயல்பாகவே, எக்கடினமும் இன்றி,
இடைவிடாது வருவதால், நாம் ஜீவன் முக்தனே!

(29) கல்வி எனும் :- குற்றம் குறை
நீங்க கற்பாயாக! நீக்கி கற்பாயாக!
குற்றம் குறை நீங்கி விட்டால், நாமரூப உலகம் இல்லை
அங்கு நாம், நாமாகவே இருப்போம்!

(30) நன்கு கறை இல்லாத, பிரம்மம் ஒன்றே உண்மை!
நீ நானும் நாமரூபமும்! அதனை கேட்டும், வாக்கும்
மலே ஆகாரமும் விவகாரமும் ஆகும்! அது பொய்யே!
பரிபூரண நிறைவான, பிரம்மம் ஒன்றே உண்மை!
மறை நியமனி, எண்ணுவதும், அதன் தோற்றமும்,
சத்தியம் பொய்யே! மாயாஜாலமே! திரை மறைப்பு,
இல்லாத பிரம்மம் ஒன்றே உண்மை! மற்றும் அனைத்து தோற்ற
நாமரூபமும், சத்தியம் பொய்யே!





இவை அனைத்தும், அந்த ஒன்றிலிருந்து வந்ததே!
” ” , அந்த ஒன்றுக்கு அயலாக இல்லை!
ஆகவே, அந்த ஒன்றே ஸத்தியம். அது வேறாகி
இருப்பது ஒன்றே! நடப்பது நாடகமே! என அமைற
அகமாக இருப்பாயாக!

(31) நாமரூப உலக, ஜீவ பொருள், தோற்றங்களாக காணாதே! எல்லாமே மண்ணாகிய பரமே!
பரமாகிய மண்ணே! என உணர்வாயாக.

அனைத்து சரீரங்களையும், சொந்த பந்தபாச, உறவுகளாக, காணாதே! எல்லாம் மண்ணாகிய பரமே!
பரமாகிய மண்ணே! என உணர்வாயாக.

மண்ணாகிய பரத்திற்கு, நாம் அன்னியமில்லை!
நமக்கு பரமாகிய, அம்மண் அன்னியமில்லை!!

என்ற நீ உணர்வால்தான், ஜகம் - உடல் - பரம்
ஒவ்வொன்றும், வெவ்வேறு என்னும், பேதபுத்தி ஒழியுமே
யன்றி, வேறு எந்த உபாயத்தாலும், பேதம் நசிக்காது!




உ

30

32

சர்வ சதாவும், சலிக்கின்ற, இந்த அலை
மனது, அசையாமல் இருக்க வேண்டுமானால்,
அகம் பிரம்ம பாவனையை, திடமாக செய்வாயாக,
பரம்பிரம்மம், பரம்பிரம்மம்,
பரமேஸ்வரம், ஸ்வரம்பரமே,
சலனமில்லா பரமே யாம்!
என்ற, சப்தத்தை, ஓயாது, தைலதாரை போல்
ஸ்மரித்துக் கொண்டிருந்தால், பர கருணையானது,
உன் சாதனையால் தர்மத்தால், அது
செயல்படமுடியாமல், செயல்பட இயலாமலும்,
இருந்தாலும், இறை கருணையாக (ஸ்ரீ பகவானாக)
இறங்கி, உன் சாதனையையே, சர்வாத்ம பாவமாகவும்,
அனுபவ பிரம்மாத்ம பாவமாகவும், மாற்றி செயல்பட்டு,
உன்னுடைய [illegible] வசத்தில்
உன்னைப் பற்றிய மாயா மனது நம் வசம்



அணு அணுவாக! அணு அணுவாக!!
அணு அணுவாக! அணு அணுவாக!!
அணு அணுவாக! அணு அணுவாக!!

எங்குக்காணினும்!
அங்கு, நிலை கொள்ளாமனம். நிலை பெறும்!
" அடங்காமனம், அடங்கும்! பின் அழியும்.

இங்கு மனம், மறைக்கான கண்ணையால், பிரம்மான்ம பாவனையில், நின்று விடும்! அதுவே ஜீவன் முக்தியாகும்.
யாம் பிரம்மம்! யாம் பிரம்மம்! யாமே எல்லாம்!
எல்லாம் யாமே! என சாதனை செய்யும் போது,
நாமரூப, உலக இருமையையும்! இயக்கத்தையும்!
கண்டு கொள்ளாதே! கண்டிக்காதே! தண்டிக்காதே!
பொறுமையாயிரு! எதையும் சகித்துக் கொள்!
எந்நிலையிலும், விட்டுக் கொடு. இருப்பது ஒன்றே!
நடப்பது நவமே என அடங்குவாயாக! அங்கு, அதுவாகவே இருப்பாய்.




(32) சரீரம் என்பது புண்ணிய பாப கர்மா சம்பந்தம் ஆகும். உன் ஆத்மாவோ எச் சம்பந்தமும் இல்லாத நிர் விகாரி! மனமானது கர்மாவை எண்ணில் கர்மாவை பற்றும். மனம் ஆத்மாவையே எண்ணினால் மனம் ஆத்மாவாகும் தர்மாதாவம் மண்ணோடு மண் ஆகும். ஆதலால் மனம் ஆத்மாவையே எண்ணுவதால் ஆத்மாவே ஆகும்

(33) முன் சொன்ன, பாடலில் கூறியபடி, உன் சாதனையை, திடமாக செய்தால், முரட்டு மாடு போல், ஓடி அலைந்த மனமானது, உன் ஸ்ரீ பகவான் கருணையினால், குற்றம் குறை பார்வை கேள்வி பேத உணர்வு! குறைந்து! குறைந்து! குறைந்து! குறைந்து! குறைந்து! குறைந்து! குறைந்து! குறைந்து! நின்று கண்களால் காணும், காட்சிகளும்! காதால் கேட்கும், வார்த்தைகளும்! **ஒன்றாக** இணைந்து, எல்லாம் அந்த, ஒன்றே என்ற, மெய்யுணர்வை, உண்டுபண்ணும் அங்கு நீ அதுவாகவே இருப்பாய்.

(34) மேலே கூறிய, நிஷ்டையை (நிஷ்டையென்பது, நீ இஷ்டப்பட்டால்தான், உன்னிடம் கூடும்! நீ இஷ்டப் படாமல், அது உன்னைக் கூடாது! இது அனுபவம்) இறை குரு கருணையால், பஞ்சமஹா பாதகம் பல செய்திருந்தாலும், அவர் அவசியம் ஜீவன் முக்தராவர். இது ஸத்தியம்!

குறிப்பு:- புண்ணியபாபம் என்பது கர்மா சம்பந்தம் கொண்டதாகும். ஆதலால் நீயோ! எக்கர்மாவும் பந்தபாசமற்ற, **சுத்தாத்மாவே** இது ஸத்தியம்.

33



35

மாயாவின் சிருஷ்டியும் இல்லை, சிருஷ்டியை
சொந்தம் கொண்டாடும், அஹங்காரமும் இல்லை,
எண்ணத்தின் மனமும் இல்லை, கற்பனையின் புத்தியும் இல்லை,
சித்தத்தின் விளையாட்டும் இல்லை, விளையாட்டின் எந்த
தாவரங்களும் இல்லை, தாவரத்தின் கர்மேந்திரியமும்,
ஞானேந்திரியமும், (5+5=10) இல்லை, 84 லக்ஷம்
ஜீவ கோடிகளும் இல்லை, 33 கோடி தேவர்களும் இல்லை,

**ஸ்ரீ ஹயன், ஹரி, ஹரன்,**

தோற்றமும், இருப்பும், மறைவும், இவ்வவே இல்லை,

**மனமாற** நேசிக்கின்ற, எம்மொருவரும் இல்லை,

ஆனால் மேலே கூறிய, அனைத்தும், எல்லாமும் எந்த

**ஸ்ரீ நாமரூப குணங்களாகவும்,**

இல்லவே இல்லை, இது ஸத்தியமே, ஆனாலும்,
இவை எல்லாம், பரமாகிய மண்ணாகவும், மண்ணா
கிய பரமாகவும், பரமாகிய நாமமாகவும், நாமமாகிய
பரமாகவும், முக்காலமும், எக்காலமும் உண்டு
என்பதே ஸத்தியம்.



ஓம்


36

நமக்கு அயலாக, எதுவும் இல்லை என்றும்,
எதுவும், நமக்கு அயலாக இல்லை என்றும், **திட**
உணர்வால், அகண்டான்ம பாவனை, பெற்றவன் எவனோ,
அவனே ஜீவன் முக்தன். **அவ்** உணர்வுடன் கூடி,
மேலே கூறிய,
பச்சிளம் குழந்தை போல், பிரம்மம் அறியா சிசு
போலும், பிரம்ம ஸ்வரூபத்தில், ஒன்றிக் கலந்து,
மயமாகி அதுவே தானாய், தானே அதுவாய்,

**பிரம்ம சாக்ஷாத்காரம்**

பெற்றவன், எவனோ அவனே **திடஞானி**

அத்திடஞானி, திரிலோகத்திலும் ஒருவனே.
அத்திடஞானியின் தரிசனத்தால் **பக்தியில்**
விளை உவர்ந்து, **ஞானக்கனியால்**
அவ்வினை கருகி, பஸ்மம் ஆகி, வினை அழிந்து நாசம்
அடைதன்மையால், ஜனன மரணம் இல்லாமல், மேல்
நோக்கிச் சென்று, பிரம்மார்ப்பணத்தால், ஜீவன்
முக்தி பெறமுடியும். என ஞானிகள் சொல்வர்
இதையே அறம் மேலோங்கும், என்றும், அறம் அழியும்,
என்றும், அனுபவ ஞானிகள் சொல்வர்.




35

37 மேலே சொன்ன, உறுதி நிச்சயம், பெற்றவர்க்கு
சமாதி
வேறு நிஷ்டா சாதனைகள், தேவையில்லை! அவர்களுக்கு
எப்பயிற்சியும் ! முயற்சியும்! இல்லாமல் சகஜ
சமாதியில், இருப்பவர்கள் ஆகும்!
கண்! காது! வாய்! எண்ணம் மற்றும்,
அவர்களுடைய, அடங்கி, அமர்ந்திருக்கும்! அவர்களுக்கு,
நாமரூப, ஆவரண மயக்கம் இருக்காது! அதனால்,
விக்ஷேப, கலக்கமும் இருக்க இயலாது!

38 அவ்வுறுதி நிச்சயம், பெற்றவர், பட்டமரம்
போலும்! கருங்கல்லும் போலும்! ஆசையால் தளிர் விடாமலும்
சந்தேக கலக்க, மயக்கில், அசையாத கல்லும் போலும்.
இருப்பதால், அவர்கள் மஹிமையை, எவராலும்
(திரிகர்த்தாக்களாலும்) சொல்ல முடியாது.
அவர்கள் அனுபவமானது, பாலில் கலந்த ஜலத்தை
அப்பாலில் எப்படி வெளியில் காட்டாதோ, அதே போல்
நாமரூப, ஜகத் வாஸனையின், குணமானது, முழுமை
யாக, அவர்களுக்குள், அடங்கி அமர்ந்து பகம்
பாலகவே இருப்பார்கள். அவர்கள் இருப்பது
ஒன்றே! நடப்பது நலமே! என அகமாக இருப்பார்கள்.


(36)



(39) பவகாலம் பழகிய, பழக்க வழக்க தோஷமது,
சாமான்யமாக போகாது தான். இம்மையவர்களுக்கு,
சாண் ஏற, முழம் சறுக்க! என்ற நிலையால்,
தாண் தோன்றும். இறை குரு நம்பிக்கையாலும்,
சர்வார்ப்பணம்! பிரம்மார்ப்பணம்! இடையறாத
அப்யாசத்தினாலும். எல்லாம் நீயே! எல்லாம் ஒன்றே!

ஒரு பங்கு உங்களுடைய, முயற்சியானது.
ஒன்பது பங்கு இறை குரு கருணை;
உங்களை மேலே தூக்கிவிடும். இது ஸத்தியம்!

(40) மேலே கூறிய, சர்வார்ப்பணம்! பிரம்மார்ப்பணம்!
இடையறாது செய்து வந்தால், உன் (ஆத்ம) சொரூ
பத்தை, நீ அடையமுடியும்! அதனால் மனம் அழியும்.
அதாவது மனம் மஹத்காரணம்! மனோ நாசமே,
மோக்ஷம் ஆகும். ஆகவே மனதாருமையுடன்
இவ் அப்யாசம் செய்து, மனதை அழித்து
ஜீவன் முக்தி பெறுவாயாக!




41 ஆகவே அனைத்திற்கும் ஆதாரமாயும்! ஆதார
மாயும்! ஆகாரமாயும்! உள்ளது அகண்ட பரப்
பிரம்மமென்றும்; நாம் அதில் ஓர் கணை......
பிரம்மம் என்றும்; இந்த பாவனையே, இடைவிடாமல்
செய்தால், சஞ்சலம் உண்டுபண்ணும், மை
குற்ற உணர்வுகள் எல்லாம், படிப்படியாக! பொடிப்பொடி
யாகும்! இது சத்தியம். இதுவே பிரம்மஞானத்திற்கு,
உரியமார்க்கம் ஆகும். வேறுமார்க்கங்கள் இல்லவே இல்லை
42 கூட்டமான வரையில், பேச்சை குறை! இதமாகவும்,
மிதமாகவும் பேசு. மனோசஞ்சலம் குறையும் வரை,
உறவு நட்பை குறை! தனிமையில், மனம் அனுபவம்
இல்லாத நிலையில், முதலில், பதட்டம் அடையக்கூடான்
செய்யும். உன் சத்குரு வாக்கியத்தின், திட உணர்வினால்,
சந்தேக கலக்க பயம் நீங்கும். வாய்ஞானம் இல்லாமல்,
திட அனுபவ ஞானத்தை பெருக்கு. குற்றம் குறைகளை
நீக்கினால் மட்டுமே, தற்பதமாகிய, பரமாத்மசொரூபம்
நீ ஆகமுடியும்! உன் திட உணர்வே, உன் சத்குருவாகிய
ஞானம்! உன் சந்தேக கலக்கமே, அஞ்ஞானம் ஆகும்!



43 உடல் நாமும் அல்ல! உலகம் அதாவது
உடைமைகள், நம்முடையதல்ல! அவைகள் வினைசம்பந்தத்
தால், வரும் போகும்! பரிவர்த்தனம்படுக்கும் மனமும்! அம்
மனதின் பொருள்களும்! நாம ரூப குணங்களுடன்!
இவ்வேயில்லை • ஆனால் அவைகள், பரமாகிய மண்ணா
கவும்! மண்ணாகிய பரமாகவும்! பரமாகிய நாமாக
வும்! நாமாகிய பரமாகவும்தான் இருக்கிறேன்;
என்ற திடபாவனையால்தான், மனோமோஹத்தை அழிக்க
முடியும் வேறொன்றாலும், அழிக்க முடியாது இது ஸத்தியம்.

44 பரஸ்திரீ போகம், கண்டிப்பாய் கூடாது!
உன் ஸ்வஸ்திரீயிடம், பிராப்தத்தின்படி, போஹம்
அனுபவிக்கும் போதும்! அவயவ(ங்களை), காம,விகார/ எண்ணங்களை! கற்பனைபண்ணாதே.
கருவி கரணங்கள், அதனதன் காரியங்களை, ஒழுங்
காக செய்கின்றன, என்ற பாவனையில் ஸாக்ஷியாய்,
(ஸ்ரீபகவானுடைய) ஸ்ரீபகவத் உணர்வோடு, எல்லாம் நீயே!
எல்லாம் நன்மையே! என எண்ணு. கர்மா முடிவுறும்!
கர்மா தொடராது! இருப்பது ஒன்றே! நடப்பது நலமே!
என அடங்கு! எல்லாம் உன்னுள் அடங்குமே!





(45) எந்த எண்ணமும், அற்றிருப்பதே, ஜீவன் முக்தி. எண்ணங்கள் நிகழும்போது, நாம ரூப, குண தோஷ, சம்பந்தத்தோடு, பின்னி உறைமை! உரிமை! பாராட்டுவதால், அதுவே பந்தமாகவும்! பந்தமே வினையாகவும் மாறும். சர்வார்ப்பணமே! பந்த தோஷ நிவர்த்தி பிரம்மார்ப்பணமே! அத்வைத நிஷ்டையாகும்! ஆகும்

## (46) மறைத்தான

மாயை என்றும், அவித்தை என்றும், பந்தம் என்றும், முக்தி என்றும், ஜகங்கள் என்றும், ஈசனின் விளையாட்டு என்றும், சிந்திக்கும் சித்தம் என்றும், சிந்தித்த ஜீவன் என்றும், கூறும் இவைகளின், நாமமும், அதன் ரூபமும்!

மண்ணாகிய, பரத்திற்கு அன்னியமில்லை! பரமாகிய மண்ணுக்கு அன்னியமில்லை! பரமாகிய நமக்கு அன்னியமில்லை! நாமாகிய பரத்திற்கு அன்னியமில்லை, என்ற திட உணர்வால் தெளிக!

(47) எந்த வினாடியும், நாமே அது! அதுவே நாம்! என்ற அகம் பிரம்ம நிச்சயம், இடைவிடாமல் செய்வாயானால், மனதின் குற்ற உணர்வுகள், நாசம் அடையும். எப்படி என்றால், விறகு தீர்ந்தவுடன், அக்கினி மறைவது போல்,



(47) லௌகீகத்திற்கும், தெய்வீகத்திற்கும் மனோ அசைவான (சஞ்சலம் கொண்டு) தர்மாதர்மம் உண்டு. பரமார்த்திக நிலைக்கு எந்த மனோ அசைவான தர்மா தர்மமும் இல்லை.

பிறகு ஞானம், வினை இருக்கும் வரை, ஞானக்கினி அதை எரிக்கும். வினை தீர்ந்தவுடன், ஞானக்கினி மறைந்து

**ஆத்மசாந்தி** (ஆத்ம சாக்ஷாத்காரம்)

தானே பிரகாசிக்கும்.

(48) லௌகீகத்திற்கும், புண்ணிய பாபம் (கர்மம்) உண்டு. தெய்வீகத்திற்கும், ஸத்திய தர்மம் (தர்மம்) உண்டு. ஆனால் பரமார்த்திகத்திற்கு, எந்த தர்மா தர்மங்களும் இல்லை.

ஆகவே பரசொருப நிலையால், வெகு வெகுஸ்திரமாத, தருங்கல்லைப் போலும், பட்டமரம் போலும், அசைந்தமாத இருப்பாரது.

(49) கட்டுக்கடங்காத வேத சாஸ்திரம் எல்லாம், சித்த சுத்திக்காகவே, சொல்லப்பட்டதாகும்! அதாவது

பூஜை, புனஸ்காரம், அபிஷேகம், ஆராதனை, மடி, ஆச்சாரம், அனுஷ்டானம், விதிமுறை, கட்டுப்பாடு, இவை அனைத்தும்,

**சித்தம் / ஸித்தாகும்** நிமித்தமே ஆகும்.

சித்தம் ஸித்தகிவிட்டால், மேலே கூறிய அனைத்தும் தானாக வந்ததும்/ஆ! வாடி கருகி, உதிர்வது போல், போய்விடும். போக வேண்டும்! இந்த மனோ ஆட்டம் காரணம்


இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என கல்லைப் போல் அசைவற்றிருப்பாயாக.



(49) பிஞ்சு பருத்து காய் ஆகும் போது, பூ எப்படி வாடி கருகி வருமோ! அப்படி அனுபவ ஞானம் பிரகாசிக்கும் போது ஆச்சாரம் அனுஷ்டானம்! நாமமே மறையும். நீயாக வெறுக்காதே! அது வாகவே மாறி மறையும்! இதன் சாதனை பொறுமையும்! பேச்சை குறைப்பதும்.


(50) காலம்! தேசம்! வர்த்தமானம்! என்ற மன வியாபாரம்! இல்லாத தன்மையினால், இவைகளினால் தோன்றும், நாம ரூப, தோற்ற காட்சிகள் இல்லை. இல்லாமை தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவு! இல்லாமையினால் சொந்தம்! பந்தம்! அதனால் தோன்றும், பவ பந்தம், இவ்வவே இல்லை! இவை அனைத்திற்கும் மூலமான, அஞ்ஞானம் (மனதை கவனக்குறைவு) இல்லாமையினால், அதன் செய்கையான, புண்ணிய பாப நான இவ்வவே இல்லை! ஆகவே நாம ரூபமற்ற பரமாகிய மண்ணே! மண்ணாகிய பரமே! பரமாகிய நாமமே! நாமமாகிய பரமே! இருப்பது ஒன்றாகவும்! நடப்பது நவமாகவும் இருக்கிறது.

(51) நாம ரூப எந்த பொருளும், தோன்றவில்லை. அப்படி, தோன்றாதது மாறியது! மறைந்தது! எனச் சொல்லவும் முடியாது. சொல்ல இயலாது! இருப்பது ஒன்றே! நடப்பது நவமே! என்ற நிலையில், மண்ணாகிய பரமே என்றும்! பரமாகிய மண்ணே என்றும்! பரமாகிய நாமமே என்றும், நாமமாகிய பரமே என்றும்! சலியாத மனத்தினால், உறுதி பண்ணி, அசைவற்று ஆனந்தமாக இருப்பாயாக.



52 எந்த நாமரூப பொருளாவது, உண்டென்று
சொல்வதுஎன்றால்; இது இப்படி, இங்கு, இருக்கிறது
என சொல்ல வேண்டும். அப்படி ஒன்றும் இருப்பதாக
தோற்றவில்லை. இருப்பது எல்லாம் ஸ்வரூப
சொரூபமே. அதாவது மண்ணாகிய, பரமே இருக்கிறது.
அனுப்பிரமாணமாவது, மண்ணுக்கு அன்னியமாய்,
எதுவுமேஇல்லை. நாமும் அப்பரமாகிய, மண்ணுக்கு
அயலாக இல்லையென்று, அச்சத்தை நீக்குவாயாக.

53 எல்லாம் பரமாகிய, பிரம்மமே என்ற, பூரண
நிச்சயத்தால், நாமரூபம் அநித்யம்
மெய்யென்ற, மனை பிராந்தி மயக்கம் தொலையும்.
நம்மிடை உடல், பரமாகிய மண்ணே. மண்ணாகிய
பரமே. என்ற, பூரணநிச்சயத்தால்.
உடல்நாம் என்னும் பிராந்தி மயக்கம்
தொலையும். நாமரூபம் எல்லாமே, மண்ணாகிய பரமே.
என்றும். பரமாகிய மண்ணே என்றும். பரமாகிய நாமே
நாமாகிய பரமே என உறுதி பண்ணி, சஞ்சயத்தை நீக்குவாய்.




54 பத அர்த்தங்களும்! பத முக்திகளும் இல்லவே இல்லை
பத அர்த்தங்களும்
பாண்ட! பண்ட பதார்த்தங்களும்

எந்த நாம ரூப, குணங்களாகவும், இல்லவே இல்லை
பரந்து விரிந்த, ஜகஜீவ, தேவ தெய்வ! எந்த
நாமரூப, தோற்றங்களும், இல்லவே இல்லை!


எந்த கட்டுகளும் இன்றி! சுதந்திரமான பரமே
உள்ளது! அதுவே நாம்! நாமே அது! என்ற உறுதியால்
மனோ நாசம் செய்து, அகமாக அம்மாவே இருப்பாயாக!

55 இல்லை என்ற, வாத்தும் இல்லை! இது இருக்கிறது
என்ற பொருளும் இல்லை! காரணம் அந்த பரமா
கிய, அகண்ட அருவாக, ஒன்று இருந்தாலல்லவோ,
உண்டு என்றும், இல்லை என்றும் சொல்லவும்!
அதை கேட்கவும் முடியும்? அகண்ட, அருவாக எதுவும்
இல்லை நாமும் அகண்ட, அருவாக இல்லை! ஆகவே
இருப்பது ஒன்றே! நடப்பது நாமே! என உணர்ந்து
அடங்கி, அகமாக இருப்பாயாக!




56 எந்த விதமாயும், நாம் பரம் பிரம்ம சொரூபமே
அன்றி, நாம் சம்சாரி என்ற, குடும்பியோ?
ஆணோ? பெண்ணோ? இல்லவே இல்லை. இந்த
உறுதிநிச்சயத்தினில், ஐக்கியத்தில் எப்படி,
உப்பு! கரைந்து கலந்து, மயமாகியிருக்கிறதோ!
அப்படி, ஆதி அந்தம், இல்லாத அகண்ட
பிரம்மானந்த, சமுத்திரமே நாம் என்ற பர
பாவனையால், கலந்து மயமானவனாக! இதுவே
அகண்டாகார விருத்தி என்று, சொல்லப்படும்!

57 தேகாதிகள் நாம் என்றல், அது மல
பாவனையின் தூல விருத்தி ஆகும்!
தேகாதிகளுக்குள், இருக்கும், ஆத்ம சைதன்யமே,
நாம் என்றல், அது அறிவின் பாவனையால்.
ஸ்ரீ பகவான் நிலையால் சாட்சி விருத்தி ஆகும்!



அனேக ஜீவகோடிகளும், நாம் | நமக்கு,
அயலாக எதுவும் இல்லை! அனைத்துக்கும் அயலாக,
நாம் இல்லை என்று, பர உணர்வோடு இருப்பது,
வேதாந்திகளின் பாஷையில், அகண்டாகார
விருத்தி என்று, ஞானிகள் கூறுவர்!
அம் மூன்று விருத்திகளில், துவைத விருத்தியை நாசம் செய்.
" " சாட்சி விருத்தியில் வந்து போ!
" " அகண்ட விருத்தியில் நிலை பெறு!


58 கோடானு கோடி, மந்திரங்களையும், உபதேசம்
செய்பவர், சாமான்ய குரு என்றும், சத்குரு என்றும்,
சொல்வர். இரண்டற்ற, காலாதீத பரசொரூபமே,
நீ என்று, கலக்கமயம் இல்லாமல், உபதேசம்
செய்பவரல்ல! ஆகுபவர் ஸத்குரு என்று,
அனுபவ ஞானிகளால், சொல்லப்படுவர்.



86

59

அனித்ய நாம ரூப, குணங்களையும், நாசம் செய்து,
எல்லாம் **மணி** ஆகிய, **பரமே!** என்றும்,
பரமாகிய, மண்ணை என்றும், எல்லாவற்றையும்,
**பொருந்தி** செய்வது! சிரவணம் ஆகும்!
அப்படி பொருந்தச் செய்வதை, விஷயானுபவத்தில்
சிக்கிய மனம், ஏற்காது/தானே. ஆகவே
அம்மனதை, பொறுமை! சகிப்புத்தன்மை! விட்டுக்
கொடுக்கல்! இவைகளால், எல்லாம் ஒன்றே! என்ற
நிலையில்; **பொருந்தி** செய்வது! மனனம் ஆகும்!
அப்படி, பொருந்தி செய்யும் போது, மனம் படிப்படியாக,
பொடிப் பொடியாகி, உன் (அறிவு) மயமாகும்!
அந்நிலையில் மனம் மறைந்த நிலையில், இயல்பாகவே,
எல்லாம் ஒன்றே! அது நானே! என **விரிந்து**
செய்வது, அதிசயமாக முடியும். இது நிதித்யாசனம் ஆகும்
இதுவே ஆத்ம சாதகர்க்கு, பரிபூரணம் ஆகும்!



47

60

ஸ்வயமான! சுதந்திரமான! ஒரியவிமான! உபதேச மஹாவாக்கியம் **தத் த்வம் அஸி!** ஆகும்!

இயல்பாக அனுபவம் தருவதும், தோஷங்களை நாசம் செய்வதும் ஆகிய தியான மஹாவாக்கியமானது!

**அகம் பிரம்மாஸ்மி** ஆகும்!


மயக்கம் அறுபட, சந்தேக கலக்கமும் அறுபட, எல்லாவற்றையும், ஒன்றுபடுத்தும், மஹாவாக்கியமானது!

**பிரக்ஞானம் பிரம்மம்** ஆகும்!

மேலே கூறிய, இம் மூன்றையும், ஸ்வய அனுபவம் பெற்று அதுவே நானாய்! நானே அதுவாய்! ஆன நிலையில், அந்த ஸத் சிஷ்யனின் அனுபவ மஹாவாக்கியமானது!

**அயமாத்மா பிரம்மம்** ஆகும்!

இந்நிலையில், அந்த உத்தம சிஷ்யன், மனம் மறந்த நிலையில், இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என அம்மாவே அகமாகவே! பிரம்மானந்த மயமாகவே, இருப்பான் இது ஸத்தியம்!





61 முக்தி அடைய வேண்டும் என, வைராக்கியம் கொண்டால்,
பசு முக்தி வேண்டாம். பர முக்தி வேண்டும். (ஜீவன் முக்தி)
தெய்வ உபாசனையின், பக்தி இருந்தால். அம்பிகவானே
நீயாகி! நீயே ஸ்ரீபகவானாகி! நீவிர் இருவரும் அந்த ஒன்றாக, வேண்டும்.
இவ்விரண்டு, சாதனைகளுக்கும், அதி அதி முக்கியமாக,
இரண்டென்ற த்வைத பயம் ஒழிய வேண்டும்.
அதற்கு உன் உரிய சாதனை:- இருப்பது ஒன்றே!
நடப்பது நவமே! நாமே அது! அதுவே நாம்! என இரு.

62 A மிக விரும்பி பேசாதே. (பேச்சை குறை)
B அதிகமான பாடங்களை, விரும்பி விரும்பி கேளாதே.
(பல கேட்டு ஒன்றை உணர். ஒன்றிலேயே நில் பெறு.)
C ஒரு வார்த்தைக்கு, பலபல அர்த்தம் ஏற்காதே.
(மனக்குழப்பமும், சந்தேகமும், வளரும். ஒன்றைப்
பற்றி நேரத்திரு) இருப்பது ஒன்றே! (எல்லாமும் ஒன்றே)
நடப்பது நவமே (இரண்டற்ற தன்மையால், ஆனந்தம் ஒன்றே)
பேச்சைக்குறை, சகித்துக் கொள்! பொறுமையே கவசம்!



சமையல் குறிப்பில்! சாம்பிலே நல்ல இருப்பதில்லை. (49)
சமையல் குறிப்பு புரிச் செயல்! சாம்பிளும் நிஜ அக உணர்வு! கற்பது புரிச் செயல்! அதையே அனுபவிப்பது அக உணர்வு! கவனம் தேவை

(63) **குற்றம் குறை** { நீங்குவதற்கு கற்பாயாக.
நீக்குவதற்கு ,,

அப்படி கற்றபின், எந்த நாள் உனக்கு, அனுபவம் நெருங்குதோ, **அதன் உள்ள்ள்ள்ள்ள்ள்ள்ளோசை,**

படிக்காதே! கேட்காதே! உணர்ந்து, உணர்ந்து, உணர்ந்து, உணர்ந்து, உணர்ந்து, உணர்ந்து, **அனுபவி!**

அதன் அனுபவம், அந்த நாவில் இல்லை. அதுவே உன் சாதனை ஆகும்


வேட்கை குறை! எதையும் சகித்துக் கொள்! விட்டுக் கொடு! பொறுமையாயிரு! பொறுமையாயிரு! பொறுமையாயிரு!

(64) **அது எமக்குப் போதும்!** என உன் இறைக் குரு! கருணையால் ஓர் நிறைவு உண்டாகும்.


அந்த ஒரு **நாள்!** மட்டும், அன்புடனும் பணிவுடனும், ஆர்வத்துடனும் ஏற்றுக் கொள். மற்றும் அனைத்து நாட்களையும் ஒதுக்கி விடு.

அந்த ஒரு நாளின் வழியே, பொருந்தி! வருந்தி! வாழ்ந்து! அப்யாசம் செய். அவஸியம், அதுவே நினைவும்! நீயே அதுவாகவும் ஆகிவிடுவாய்! ஆகி விட்டாய்! இது ஸத்தியம்.

(50)




65 உனக்கு அன்னியமாக, தோன்றும் இந்த, நாமரூபம்
அனைத்தும், உனக்கு அன்னியமாக இல்லவே இல்லை.
கனவில் காணும், நாமரூபம், அனைத்தும், உன்னில்
தோன்றி! உன்னிலேயே முழு மித்தையாய், ஒடுங்கி
அழிந்து விடுவது போல், இந்த நாமரூப, ஜக ஜீவ
சொரூபம் அனைத்தும், உன் மனஎண்ணத்தால், தோன்றியது
உன் ஆழ்ந்த உறக்கத்தில், இந்த நாமரூப உலகம், எப்படி
இல்லையோ? அதேபோல் எல்லாம் ஒன்றே! எல்லாம் மாயமே!
எல்லாம் மண்ணே! எல்லாம் நாமமே! நாமமே எல்லாம்!
என எந்த விழி, **சத்தியமாய்** உணர்கிறதோ
அந்த விழியே, அனைத்தும் மறைந்து **அது** ஆகவே இருப்பாய்.
66 இருக்கின்றது! **சத்** சத்தாகவே இருக்கிறது.
இலங்குகின்றது! சத்தே **சித்** தாக அசைகின்றது.
இன்பமாகின்றது! சத்தே! சித்தாகி! நாமரூபமறுத்து,
அசைவதனால், இன்பம் என்ற **ஆனந்தம்** தோன்றுகிறது



ஆகவே இங்கு, ஸத்தும், ஸித்தும், ஆனந்தமும், நிர்விகாரமும்.
அதுவே காலாதீத, **பரம்** என கொள்ள வேண்டும்.
ஸித்தின் விளையாட்டில், தோன்றிய, நாம ரூபமும்,
அதைஎடுத்து, விளையாடிய, மாயா மனமும், புண்ணிய
பாப பிறவியின், வித்தாக இருப்பதால், **நாமரூபத்தை** தள்ளவும், ஸத், ஸித், ஆனந்தத்தையும்,
ஒத்தும் பழக வேண்டும். இதன் சாதனை, பேச்சை குறை,
விட்டுக்கொடு! சகித்துக்கொள், பொறுமையாயிரு.
இங்கு இருப்பது ஒன்றே, நடப்பது நவமே, ஸத்தியமாகும்.


67 துவைதம் என்றும், விஷிஷ்டாத்வைதமென்றும்,
அத்வைதம் என்றும், லௌகீகம் என்றும்,
தெய்வீகம் என்றும், பரமார்த்திகம் என்றும்,
இவ்விதம் என்றும், அவ்விதம் என்றும், இல்லை
உண்டென்றும், இப்படி, பல விதமான **பேதா பேதம்** எல்லாம், **மனம்** மயக்கும் விவகாரம்
ஆகும், இவை அனைத்தையும், காலாதீத பரசொரூப
அம்சம் என்றும், அகற்று அனன்யமாய், எதுவும்
இல்லை என்றும், எல்லாம் ஒன்றே என்ற உணர்வில்
இருப்பது ஒன்றே, நடப்பது நவமே, என்று அடங்கி,
அதுவே நாம், என ஆகுவாயாக.



அறிவாளி என்றால் (52)
திட உணர்வால்
ஸ்திரத்தன்மையால்
உறுதியானவன்.
புத்திசாலி என்றால்
மாற்றத்தின் மேல் மாற்றம்
மேல் மாற்றத்தின் தடுமாற்ற
தடுமாற்றத்தால் சந்தேக சலனமயத்தால்
சஞ்சலம் அடைபவன் ஆகும்.

(68) அகண்டமான பரிபூரண, பிரம்மமானது, அறிவு அற்ற
புத்திசாலிகளான, அஞ்ஞானிகளுக்கு மட்டும்,
நாமரூப, ஜகத் ஜீவர்களாக தோற்றும். அறிவுள்ள
அறிஞர்களுக்கு, பரசொரூபமாகவே தோற்றும்.
அதாவது, கவனக்குறைவானவர்களுக்கு, கயிறு ஓர்
சர்ப்பமாக தெரிவது போலவும், தக்க கவனமாக
உள்ள அறிவாளிகளுக்கு கயிறாகவே தோற்றுவது,
போலவும் ஆகும்.

(69) நாமரூப ஜகத்தில், போக்குவரவாலும், கொடுக்
கல் வாங்கலிலும், மயங்காமல், எல்லாம் ஒன்றே,
ஆகவே இருப்பது ஒன்றே, நடப்பது நலமே, என அக
மாத சும்மா இருப்பவர்களே, பிறந்த பிறவிப் பயனை,
அடைந்தவர்களாகும். அவர்களே, சந்தேக சலன
பயமின்றி, துன்பம் அற்றவர்களாகும். அவர்களுக்கு,
இனி இங்கு செய்யத்தக்க காரியம், எதுவும் இல்லை,
அவர்களுக்கு, இந் நாமரூப, விகார காட்சி இல்லை.
அதனால் தொடரும், விவகாரங்களும், பிரச்சனைகளும்
இல்லவே இல்லை!




53

70 தன்னை அறியும் அறிவை, அறிந்து, அது நாமென
ஆகாதவர்களுக்கு சொந்த பந்த பவ பாசம்!
ஜனனமரண பிறவிக்கிரியும் தொடர்வதிலே
அவர்கள் வேறு எந்த சாதனை செய்தாலும்
பிறவிநோய் தீராது. இது சத்தியம்!


71 உன் ஸத்குருதேவர்! முன்னிலையில் கேட்டு,
உணர்ந்த ஞானபாடங்களை, அங்கு சம்பந்தம்
கொண்ட, ஆத்ம சாதகர்களிடம் மட்டும் கலந்து
உரையாடி, தெளிவு பெறலாம். வேறு எவரிடமும்
தெளிவு பெற முடியாது. அப்படி செய்தால், அவர்க்கு
தவக்க, சந்தேகபயம் தொலையாது.

72 வேதம், சாஸ்திரம், வேதாந்தநூல், புராணம்,
இதிகாசம், ஆகமம், என ஒருமை இருமை! பிரிவினை
பகுத்தும், நூல்கள் எல்லாமே, பிறவித்தளையை போக்காது
இங்கு, அனைத்தையும் ஒன்றுக்கே அந்த ஒன்றை, தனக்கே
இருப்பது ஒன்றே நடப்பது நலமே! என அடங்கி
இருந்து, அம்மா அகமாயிரு!



73 உன் சித்தமே, நாம ரூப பிரபஞ்சமாக, தோற்றுகிறது.
,, ,, சம்சார சாகரமாக ,,
உன் சித்தத்தை, அறிவு ஊன்றி, உணர்ந்தால், உன்
ஸித்பர சொரூபமே! சித்தமாக மாறி, நாம ரூப ஜக
மாக, தோற்றிக் கொண்டு! மனம்! புத்தி! சித்தமென!
பவநாமங்களை, இயக்கிக்கொண்டு, தக்கபடி மாற்றிக்
கொண்டு, விளையாடுகிறது, என விளங்கும். ஆகவே நாம ரூப,
ஜகத்தை மறந்து, எல்லாம் ஒன்றே என்ற உணர்வைப்
பெற்று. இருப்பது ஒன்றே! ஸ்வரூபமே! என சும்மா இரு.


74 உன் கற்பனையின் மனமே, நாம ரூப ஜகமாக,
தோற்றுகிறது. ஆகவே, ஸங்கல்பமே! உலகம்!
ஸங்கல்ப நாசமே! மோக்ஷம்! என்பதுணர்ந்தால்
அச்சங்கல்பத்தை, சற்று
தனின் அனுபவம் ஆகும்.
மாற்றி, நாமரூபம் பொய் என்றும். நாம ரூபம்
தோன்றிய, மண் சத்தியம் என்றும். மண்ணாகிய
பரமே! பரமாகிய மண்ணே! பரமாகிய நாமமே!
நாமமாகிய பரமே! சத்தியம் என, ஓர் உணர்வோடு
மனனம் செய்து சும்மா வே சுகமாக, இருப்பாயாக.



75 ஸித் பரசொரூபமாகிய, எம்மிடமே மனம்
தோன்றியது! எம்மிடமே மனம், எண்ண வடிவில், நாமரூப
ஜகஜீவ பொருள்களை, வைத்து விளையாடியது. மன எண்ணம்
எம் அம்ச, அறிவில் ஒடுங்கி விட்டது. ஆகவே, ஸித்
பரசொரூபமாகிய, எம்மை யல்லால், மனமோ! நாமரூப
ஜகஜீவர்களோ, இல்லவே இல்லை. ஸித்பமமோ! அறிவோ!
யாமே! எமக்கு அன்னியமாய், எதையும் இல்லை என்று,
சிந்தித்து! சிந்தித்து! சிந்தித்து! சிவமாகவே இருக்கிறோம்.

76 ஸித் பரசொரூபமாகிய, எம்மை யல்லால்,
நாமரூப, ஜகஜீவ, ஈஸ்வராதிகள், எதையும் இல்லை.
எம்மை யல்லால், எண்ணங்களோ! அதன் தோற்றங்
களோ! அதன் செயல்களோ! எதுவுமே இல்லை. ஸித்
பரசொரூபமாகிய, யாம் என்றும், சிவசொரூபமே!
என சிந்தித்து! சிந்தித்து! சிந்தித்து! சிவமாக, சும்மாவே
சுகமாக இருக்கிறோம்.


77 ஸித் பரசொரூபமாகிய, எம்முடைய
கனவில் காணும் பொருள்களும்! நனவில் காணும் பொருள்
களும்! எம்மிடமே தோன்றி, ஒடுங்கி விடுவதால், எம்
மையல்லால், எந்த நாமரூபமும், இல்லவே இல்லை. யாம் என்றும்
சிவமாகவே, சும்மாவே! சுகமாகவே, இருக்கிறோம்.



78 அகம்பிரம்மம், ஜகம்பிரம்மம், அகமே எல்லாம்!
என்ற ஆத்மஞானமானது! திட விவேகத்தாலும்,
உன் ஏக்கத்தினால், பெற்ற ஸ்ரீ ஸத்குரு கருணையினாலும்,
தைலதாரை போல் இங்கிங்கில் சிரத்தையாலும்,
பரகுரு கிடைத்த, அகண்ட சிவம் கருணையினாலும்,
வாய்ஞானம் இல்லாமல், அனுபவ ஞானம் ஆகும்!


79 அகம்பிரம்மம், ஜகம்பிரம்மம், அகமே எல்லாம், என்ற
அகண்டாண்ட பாவனையை வாக்கால் திரும்ப
திரும்ப, சொல்ல எந்த வருத்தமும் இல்லை. உன் யதார்த்த
வடிவத்தில், நிலைபெறும் வரையில். (ஸ்வய ஞானம் ஆகிய
நிலை பெறும் வரையில்) திடமாக செய்வாயாக. அவஸியம்
அது நீயே ஆவாய் இது ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்!

80 மறைவில்லாத, பிரம்மம் அல்லாமல் மாயாவும்
இல்லை, அதன் நாமரூப, திருஷ்டியும் இல்லை. என்றென்றும்
கெட்டுப் போகாத பிரம்மம் அல்லாமல், நாமரூப ஜக ஜீவ
ஈஸ்வராதிகளும் இல்லை.
பரிபூரண அறிவு சொரூபமான, பிரம்மம் அல்லாமல்
உண்டு இல்லை எனச் சொல்லும், எதுவும் இல்லை! அனைத்திற்கும்
காரணகர்த்தாவான பிரம்மம் அல்லாமல், காரிய
தோற்றம் எதுவுமே இல்லை எல்லாம் ஒன்றே!
அது ஞானமே! ஞான அம்சமாகவே அகமாகவே இருப்பாயாக.



81


நாலாந்திரூப பர சொரூபமாகிய, பரப்பிரம்மமானது,
திரிகர்த்தாக்களாகவும்! இவர்களுக்கு, மூலமாக இருக்கும்,
**ஆதிசிவம்** ஆகவும்! ஐந்து பஞ்ச பூதங்களாகவும்!
கோடானுகோடி, சூர்ய சந்திராதி, அண்டங்களாகவும்!
அசைவன அசையாதன வாகவும்! அனைத்து எல்லாமாய்!
தோற்றுவம். ஆனால் அனைத்து **நாமரூபங்களும்**
பொய்! அனைத்து நாமரூபங்களுக்கும், ஆதாரமான பிரம்மம்
ஒன்றே ஸத்தியம்! எல்லாம் பரமாகிய மனனே/ மன
னாகிய பரமே! அதுவே நாம் என, உணர்பவர் பக்தராவாய்!
82 எல்லாம் வேறு என்றும். நாம் வேறு! நீ வேறு என்றும்!
எண்ணும் **அபேத** புத்தியாலே, நாமே அது! அதுவே
நாம்! என்ற **திட** வைராக்கியத்தில் நின்றென்றி,
வேறு எந்த **கர்மகாண்ட** உபாசனையாலும்.
நீங்கவே நீங்காது. அக்வே இருப்பது ஒன்றே!
நடப்பது நலமே! என்று ஆனந்தம் பெறுவாயாக!



83 அகம் பிரம்மம்! பிரம்மம் அகம்! என்ற அகண்டாண்ம பாவனையானது! தவனக் குறைவின், சந்தேகம் எல்லாம் போக்கி விபரீத புத்தியை நாசம் செய்யும்! அதுவே நாம்! நாமே அது! என்று, அசைவற்றிருக்கச் செய்யும்! சம்சார **விதை** ஆகிய, பதிபந்தங்களை, நாசம் செய்யும்!

84 பிரம்மன்! நாராயணன்! சிவபெருமான்! ஆகிய திரிகர்த்தாக்கள் என்றும், அவர்களுடைய, முத்தொழில் என்றும், தீர்த்தம்! க்ஷேத்ரம்! ஸ்தலம்! என்ற புண்ணிய காரியம் & சேவையென்றும், தான தருமமென்றும், **உள்ளாம்கவரும்** மயக்கமான, எந்த கர்ம தர்மமும் எவையும், நாமரூப நிச்சயங்களாக இல்லை. அந்த ஒன்றாக இருக்கிறது. அதுவே நாமாக இருக்கிறோம், என அகண்டாண்ம பாவனையில் அசைவற்றிருப்பாயாக.

85 கோடானு கோடி, மந்திரங்களையும், ஓதுகின்றார். இவைகள் முறையாக, உன்னை ஒரிய குருவையும் ” . வார்த்தையின் மாயாஜாலங்கள், அனைத்தையும் ” . **குற்றம்குறை** மன ஆரம்பமட்டும், ” ஓதுகின்றார். எல்லாம் ஒன்றே! அது நாமே! நாமே அது! என்ற பேருணர்வில், அசையாமல் நிலைத்து, இருப்பது ஒன்றே நடப்பது நலமே! என, சும்மாவே சுகமாகவே இருப்பாயாக!




59

எம் உறக்கத்தில்
இவ்வுலகைப் பார்
காண்கிறீர்கள் என்றால்
அந்த நாமம் எமக்கு
இல்லாமல் போன உலகம்
எப்பொழுதும் இல்லை என்று
வைராக்கியமாக
தன்னுடையதாக உலகைத் தன்
தன் என்றால் நாம ரூப குணதோஷங்களுக்கும்
ஆட்படாதே எனப்பொருள் கொள்

86 ஸ்ரீ **காமக்ரோதாதி** துஷ்ட கலி தோஷ குணம் அனைத்தையும், நாசம் செய்து, நான்! என்னுடைய! எனது! ஆகிய அஹங்காரம் மமகாரங்களையும், நாசம் செய்து, வியாபாரம்! விளம்பரம்! ஆடம்பரம்! ஆகிய கலி, தோஷங்களையும் நாசம் செய்து, துவைதம்! விசிஷ்டாத்வைதம்! அத்வைதம்! என்ற **மதே** பேதங்களையும், நாசம் செய்து, உண்டு! இல்லை! என்ற மனம்! புத்தி! சித்தத்தின்! அசைவுகள், அனைத்தையும் நாசம் செய்து, அதுவே நாம்! நாமே அது! என்ற **ஞா**னமயமாய் அசைவற்றிருப்பாயாக.

87 நிரந்தரமாயும், சாஸ்வதமாயும், நிர்மலமாயும், **பேரான** எம்மிடத்தில், இந்த நாமரூபமனைத்தும், உதித்து ஒடுங்குவதால், எங்கும் அன்னியமாய், எதுவும் இல்லை என்ற பரப்ரஹ்மனாய், அசையாமல் இருப்பாயாக.

88 உண்மையாகவே, இந்த நாமரூப உலகம், உண்டென்றால் எம் உறக்கத்திலும் (ஆன்மாவில் மனம் சேர்ந்த நிலையில்) இவ்வுலகம் இருக்க வேண்டும். அப்பொழுது இவ்வுலகம் இல்லை. ஆகவே இவ்வுலகம், எம் **மனோ** விருத்தியேயாகும்! அஞ்ஞானம் இல்லாத இவ்வுலகத்தை இல்லையென்றே தள்ளி, இருப்பது ஒன்றே! நடப்பது நமதே! என **பேத** புத்தி, அனைத்தையும் தள்ளி உன்னில் நீ, நிலை பெற்று, அசைவற்றிருப்பாயாக.



(89) ஓரிரு வயது பச்சை குழந்தையாக, இருக்கும் போது,
மறைவளர்ச்சி இல்லை. ஒன்றும் இயலாத
தன்மையாகிய, வயோதிகத்தில், மறைவளர்ச்சியானது
இறந்து விட்டது. மத்தியில், (வாலிபத்தில்) சிறிது
காலம், இருந்ததாக பேசப்படுகிறது. (கனவு போல் வந்து
போய் விட்டது.) ஆகவே இவ்வகை, இல்லை என்றே தள்ளிவிட்டு
இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என ஒன்றுவோம்.

(90) கடம் என்ற குட ஆகாயமும், பரந்து விரிந்த
மறை ஆகாயமும் ஒன்றே! இங்கு குடமே, உபாதை என்ற
பேதமாகும். குடம் என்ற நாமரூபத்தை, மண்ணாகிய பரமே!
என்றும். பரமாகிய மண்ணே! என்றும் ஒன்று படுத்திவிட்டால்
ஆகாயம் (பரம்) ஆகாயமாகவே (பரமாகவே) இருக்கும். அவை
எல்லாம் ஒன்றே! அது நானே! என அசைவற்று நிருபிப்பாயாக.

(91) சிவம் + அகம் = சிவோகம்:- சிவமே நான்! என்ற
நிலையில், மகாவாக்கிய நிலையில் தத்துவம். அசி,
அஸிபத பரம் பொருளே தத்பத பரமாத்மாவாகி த்வம்பத ஜீவாத்மா
வாகி, இருக்கிறது என்ற, உபாதி பேதத்தை நீக்கி (மறைமய
விருத்திகளை நீக்கி) எல்லாம் ஒன்றே! என்ற ஐக்கியத்தால்
மறைமய பேதம் அனைத்தையும் தகர்த்து, அசைவற்று நிருபிப்பாயாக!



(91) **உ** குணங்களை உடையதான ஆத்மாவை என்றால்? ஆத்மா செயலற்றதாகும். அது செயல்படுவதற்காக ஆத்மா என்ற பரமும்! மாயாவும் இணைந்து ஸ்ரீபகவான் நிலையில் செயல்படுவதால் குணங்களை உடைய ஆத்மா என்று சொல்லப்படுகிறது.

(92) **தத்** பத பரமாத்மாவும்! **த்வம்** பத ஜீவாத்மாவும்! **அஸி** பத பரசொரூபத்திற்கு! அன்னியமாயில்லை என்ற, உறுதியான வைராக்கியம் நிறைவு! **நிர்ப்பயமாய்** (கவலை பயமற்ற நிலையில்) **அகண்டாந்தம்** (அகண்டான்ம பாவனையில்) நிலைத்து அசையாமல் நிற்பாயாக.

(93) நாம ரூபமாக **வேறுவேறாக** தோற்றமும், அனைத்தும், சுத்த சிவத்திற்கு, அன்னியமாயில்லை என்று, திடமாக அறிய வேண்டும். ஆதி அந்தமில்லாத, எல்லை **குணங்கள்** உடையதான, ஆத்மாவாக அறிய வேண்டும். **பகுதிகளற்ற** (பிரிவினையற்ற) **ஏக** ஆன்மா என திடமாக உணர்ந்து, தன்னில் தான், நிலைத்திருப்பாயாக.

(94) **மன** எண்ணங்களுக்கும் அதீதமாகி! **மாயா** காரியம், அனைத்திற்கும் அதீதமாகி! ஜாக்ரம், சொப்பனம், சுழுப்தி, என்ற **மூன்று** அவஸ்தைகளுக்கும், அதீதமாகியும் எந்த பாவனையும் இல்லாத, உண்மையான பிரம்மம் நானென எந்த கலக்கம் மயக்கம் இல்லாமல், மனதை வெல்வாயாக!

எல்லாம் நீயே! எல்லாம் நலமே!
எல்லாம் நீயே! எல்லாம் நலமே!
எல்லாம் நீயே! எல்லாம் நலமே!

**பாபா.**


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!